### திருமணம் ஆகாத ஏக்கத்தில்

# இளம்பெண் தூக்குப்போட்டு சாவு

சென்னை, ஏப்.12–

சென்னை புரசைவாக்கம் பொன்னம் தெருவைச் சேர்ந்தவர் வீராசாமி. இவருக்கு ஹேமலதா, சுதா, கவிதா (வயது 27), சுசித்ரா என்ற 4 மகள்களும், பிரேம்குமார் (16) என்ற மகனும் உள்ளனர். இதில் ஹேமலதாவுக்கும், சுதாவுக்கும் திருமணமாகி விட்டது. பிரேம்குமார் நடைபாதை வண்டியில் வாழைப்பழம் வியாபாரம் செய்து வருகிறார். வீராசாமி உயர் ரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். இதனால் கவிதா வீட்டில் இருந்து தந்தையை கவனித்து வந்தார்.

கவிதாவுக்கு மாப்பிள்ளை பார்த்து வந்தனர். ஆனால் சரியான வரன் அமையவில்லை. சில நாட்களுக்கு முன், அவரை பெண் பார்க்க மாப்பிள்ளை வீட்டார் வந்தனர். ஆனால் அவர்களும் பெண்ணை பிடிக்கவில்லை என்று கூறிவிட்டனர். இதனால் கவிதா மிகவும் மனமுடைந்தார். "எனக்கு வயதாகி கொண்டே போகிறது. இனிமேல் திருமணம் நடக்காது. எனவே நான் யாருக்கும் பாரமாக இருக்க விரும்பவில்லை" என்று வீட்டில் உள்ளவர்களிடம் கூறியுள்ளார். ஆனால் வீட்டில் உள்ளவர்கள் கவிதாவை சமாதானப்படுத்தினர்.

இருப்பினும், வாழ்வதைவிட சாவதே மேல் என்று கவிதா முடிவு செய்து, நேற்று முன்தினம் இரவில் வீட்டில் எல்லோரும் தூங்கிய போது, துப்பட்டாவால் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இதுகுறித்து வேப்பேரி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.